**PW.1** சுஜினி

16-03-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பி.சி.எஸ். படித்துள்ளேன். எனது முதல் சாட்சியத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். 5 ஆம் எதிர்மனுதாரரின் வெற்றி செல்லாது என்று நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். தேர்தல் அறிவிப்பு எப்பொழுது வந்தது என்று எனக்கு ஞாபகமில்ல, 04-02-2022 ஆக இருக்கலாம். 2022 உள்ளாட்சி தேர்தலில் வேட்பு மனு தாக்கல் எந்த தேதியில் ஆரம்பித்து எந்த தேதியில் முடிவடைந்தது என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை, காரணம் அப்பொழுது என் மகன் இறந்து விட்டார். 59 வது வார்டில் மாமன்ற உறுப்பினர் பதவிக்கு மனு தாக்கல் செய்தேன். நான் எந்த தேதியில் வேட்பு மனு தாக்கல் செய்தேன் என்று ஞாபகமில்லை, 4 லிருந்து 7 ஆம் தேதிக்குள் இருக்கலாம். 59 வது வார்டிற்கு மொத்தம் 13 வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார்கள். வேட்பு மனுக்கள் எந்த தேதியில் பரிசீலிக்கப்பட்டது என்று தேதி நினைவில்லை. எத்தனை பேர் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றும், எத்தனை பேர் மனுக்கள் நிராகரிக்கப்பட்டது என்றும் நினைவில்லை. 59 வது வார்டில் தொடர்ந்து அ.தி.மு.க தான் ஜெய்த்து வந்தது. ஆனால் 2022 வருட தேர்தலில்

தி.மு.க.வை சேர்ந்த 5 ஆம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றார். அதனால் சந்தேகம் அடைந்து இந்த மனுவை நான் தாக்கல் செய்தேன். எனது முதல் சாட்சியத்தில் பத்தி 5 ல் 5 ஆம் எதிர்மனுதாரர் வாக்காளர்களிடம் ஓட்டுகளை பெற தலா ரூ.5000/- பணம் கொடுத்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் குறிப்பாக எந்த தேதியில் அவ்வாறு 5 ஆம்எதிர்மனுதாரர் பணம் கொடுத்தார் என்று நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அது சம்மந்தமாக நான் தலைமை தேர்தல் ஆணையரிடம் புகார் தெரிவித்தேன். ஆனால் எந்த தேதி என்று சரியாக எனக்கு நினைவில்லை. அந்த புகாரின் நகலையோ அதை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டையையோ, மற்றும் போஸ்டல் ரசீது போன்றவற்றை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், புகார் கொடுத்ததாக வழக்கிற்காக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தேர்தல் ஆணையரின் கண்காணிப்பில் தேர்தல் நடைபெற்றது என்றும், வாக்காளர்களுக்கு யாரும் பணம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் புகார் கொடுத்திருந்தால் முதல் இரண்டு எதிர்மனுதாரர்கள் அதை விசாரித்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல.

எனது முதல் சாட்சியத்தில் பத்தி 6 ல் 5 ஆம் எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய கட்சினர்கள் வேட்பாளர்களுக்கு வெள்ளி கொலுசு மற்றும் ஹாட்பாக்ஸ் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எந்த தேதி என்று நான்

குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் தேர்தலுக்கு முன் 10 நாட்களாக அவர்கள் கொடுத்து கொண்டிருந்தார்கள். அது சம்மந்தமாக சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்தேன். ஆனால் அது சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் அதுபோன்ற புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் நான் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

59 வது தொகுதியின் மொத்த வாக்காளர்கள் எவ்வளவு என்று எனக்கு நினைவில்லை. ஆனால் பதிமூன்றாயிரத்திலிருந்து பதினான்காயிரமாக இருக்கலாம். 59 வது வார்டில் எந்த பாகத்தில், எந்த வரிசையில் எனது ஓட்டு இருந்தது என்று எனக்கு நினைவில்லை. எனது பெயர் அடங்கிய வாக்காளர் பட்டியலை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. எனது பெயரை முன்மொழிந்தது யார் என்று எனக்கு நினைவில்லை. 59 வது வார்டிற்கு மொத்தம் எத்தனை பூத்துக்கள் இருந்தது என்றால் 14 பூத்துக்கள் இருந்தது. 14 பூத்துக்களும் எந்த, எந்த இடத்தில் இருந்தது என்று குறிப்பாக எனக்கு ஞாபகமில்லை. அய்யர் லே அவுட்டில் உள்ள அரசு பள்ளியில் நான் வாக்களித்தேன். 14 பூத்துக்களிலும் எனது பூத் ஏஜெண்டுகள் இருந்தார்கள். ஒவ்வொரு பூத்துக்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். வாக்குபதிவு பொதுவாக அமைதியாக நடைபெற்றது. 4 மணிக்கு மேல் வாக்குகள் பதிவுகள்

முடியும் நேரம் என்பதால் வாக்கு போட வருபவர்களை உள்ளே விட முடியாது என்று பிரச்சனை செய்தார்கள். மறுநாள் ஊடகங்களில் அமைதியான முறையில் உள்ளாட்சி தேர்தல் நடந்ததாக வெளியானது என்றால் சரிதான். வாக்களிக்க வந்த யாரையும் தடுக்கவில்லை என்றும், முறையாக தேர்தல் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி சட்டப்பூர்வமாக தேர்தல் நடந்தது என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாக்கு எண்ணிக்கை ஜி.சி.டி கல்லூரியில் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை 23-02-2022 அன்று நடைபெற்றது. வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது என்று சொன்னால் சரிதான். வாக்கு எண்ணிக்கையின்போது நானும் சென்றிருந்தேன். வாக்கு எண்ணிக்கைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பும் நான் சென்றிருந்தேன். பெட்டிகளை மாற்றுகிறார்கள் என்றும், இரண்டு நாட்களுக்கு முன்பு பவர் சப்ளையும் அந்த கல்லூரியில் இல்லை என்பதாலும் என்னுடன் சேர்ந்த சுமார் ஐந்து நபர்கள் நாங்கள் அந்த கல்லூரிக்கு சென்று பார்த்தோம். ஆனால் கல்லூரிக்கு உள்ளே செல்லவில்லை. வெளியிலேயே இருந்து பார்த்து வந்து விட்டோம். வாக்கு எண்ணிக்கை மையத்தில் எனது சார்பாக கண்காணிப்பு முகவர் இருந்தார்கள் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு நினைவில்லை. எண்ணிக்கைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கல்லூரிக்கு சென்றோம். ஆனால்,

எந்த அதிகாரியையும் நான் சந்திக்கவில்லை. நாங்களாகவே திரும்ப வந்து விட்டோம். நான் தனிப்பட்டமுறையில் ஆட்சியரிடம் மேற்சொன்ன விதிமுறைகள் சம்மந்தமாக எந்த புகாரும் அளிக்கவில்லை. கட்சியின் சார்பாக கொடுத்திருக்கலாம். மொத்தம் பதிவான வாக்குகள் எவ்வளவு என்று எனக்கு நினைவில்லை. ஆனால் நான் 1113 வாக்குகள் பெற்றிருந்தேன். 5 ஆம் எதிர்மனுதாரர் 6062 வாக்குகள் பெற்றிருந்தார். வாக்கு எண்ணிக்கை மையத்தில் எனது முகவர் வாக்கு எண்ணிக்கை ஆரம்பித்ததிலிருந்து முடியும் வரை அங்கேதான் இருந்தார். நானும் வாக்கு எண்ணிக்கையின்போது உடன் இருந்தேன். வாக்கு எண்ணிக்கை முழுவதும் கண்காணிப்பு கேமிராவால் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை. எனது முதல் சாட்சியத்தில் பத்தி 9ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எதுவும் உண்மையானவைகள் இல்லை என்றும், முற்றிலும் கற்பனையான விவரங்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த உள்ளாட்சி தேர்தல் முறையாகதான் நடந்தது என்றும், எவ்வித விதிமீறல்களும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற அன்றே மாலையில் 5 ஆம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றதாக அறிவித்தார்கள் என்று சொன்னால் சரிதான். வாக்கு எண்ணிக்கை முடிந்து ஒரு மாதம் கழித்த பின்னர்தான் 18-03-2022 அன்று புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால், சரிதான். வா.த.சா.ஆ.6 ஐ கொடுத்ததற்கு ஆதாரமாக புகா ஏற்பு ரசீதோ, அல்லது போஸ்டல் ரசீதோ எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.6 புகாரை நான் உரிய அதிகாரிகளிடம் கொடுக்கவில்லை என்றும், அது வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாக்கு எண்ணிக்கையின்பொழுது குறைபாடுகள் இருந்திருந்தால் அன்றைய தினமே நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும், ஒரு மாதம் கழித்து கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. தேர்தலில் தோல்வியுற்ற காரணத்தினால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எவ்வித ஆவண ஆதாரமும் இல்லாமல் நான் தாக்கல் செய்த ஆவணங்களின் உண்மை தன்மையும் இல்லாமல் நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாநில தேர்தல் ஆணையமும், மாவட்ட தேர்தல் அதிகாரியும் உரிய தேர்தல் நடைமுறை விதிகளை பின்பற்றி வெளிப்படை தன்மையுடன் அந்த தேர்தலை நடத்தி உள்ளார்கள் என்றும், அதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றும், அதனால் எனது மனு தள்ளுபடி செய்யபபடவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனது மனுவில் எவ்வித உண்மை தன்மையும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(5 ஆம் எதிர்மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்களின் குறுக்கு விசாரணையை முற்றிலுமாக ஏற்று கொள்கிறார்கள்)**

(3 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

sd/ சுஜினி,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.